**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.310/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | ரமேஷ் |
| Father's Name/Husband Name: | பழனிமுத்து |
| Village : | கள்ளப்பட்டி |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்வி எனது சித்தி. அ.சா.2 என்னுடைய அம்மா. 15.09.2016ம் வருடம் நானும் எனது அண்ணன் சரவணன் என்பவரும் வேலைக்கு சென்றுவிட்டோம், அ.சா.1ற்கும் எதிரிகள் ராமசாமி குடும்பத்திற்கும் வீட்டை காலி செய்வது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. நாங்கள் வேலைக்கு சென்றுவிட்டு திரும்பி வந்போது வீட்டிற்கு முன்பாக கூட்டமாக இருந்தது , என்னவென்று விசாரித்த போது எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ உருட்டுக் கட்டை மற்றும் கத்தியால் தாக்கியதாக சொன்னார்கள். என்னுடைய அம்மாவிற்கு கழுத்தில் வீக்கம் இருந்தது. அ.சா.1ற்கு தலையில் அடிப்பட்டும், இடது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. காயம் பட்ட இருவரையும் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில்

சிகிச்சையில் நான் தான் சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்திருந்தால் யார் அடித்தார்கள் என்பது தெரிந்திருக்கும் என்றால் சரிதான். எனது அம்மாவையும், சித்தியையும் யார் அடித்தார்கள் என்பதை என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் எனது அம்மாவும், சித்தியும் தான் சொன்னார்கள். எனது சித்தியும் அம்மாவும் தான் சொன்னார்கள் என்பதை நான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். என் மீதும் , என் அம்மா மீதும், எனது சித்தி செல்வி மீதும் , என் அண்ணன் சரவணன் ஆகியோர்கள் மீதும் அரும்பாவூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 265/2016 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு அது வேப்பந்தட்டை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் C.C No.46/2021 என்ற வழக்கு இருந்து விடுதலையாகிவிட்டது என்றால் சரிதான்.

எதிரிகள் எனது அம்மா மற்றும் சித்தியை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அவர்கள் அடிக்கவில்லை என்பதால் தான் அவர்கள் கொடுத்த புகாருக்கு முதலில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.